9.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.376/2021

PROSECUTION WITNESS L.W.2/P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : S.K.ரெங்கேஸ்வரன் | Caste | : |
| Father's Name | : K.சக்திவேல் | Calling | : |
| Husband’s Name | : | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

1,2 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 17.10.2024

முதல் விசாரணை

1) நான் தற்சமயம் 110 பட்டாளியன் சில்லாங் மேகாலயாவில் எல்லை பாதுகாப்பு படையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 02.04.2019 முதல் வன உயிரின குற்ற தடுப்பு பிரிவில் 26.07.2024 வரை ஆய்வாளராக மாற்று பணியில் பணிபுரிந்தேன்.

2) 02.03.2020 ம் தேதி, நான் ராமேஸ்வரத்தில் இருந்தபோது, சென்னை தென்மண்டலத்தில் இருந்து எனக்கு OLX இணையதள மூலமாக ஈரோட்டில் தடை செய்யப்பட்ட கடல் வாழ் உயிரினங்களை விற்பனை செய்வதாக எனக்கு தகவல் வந்தது. 03.03.2020 நானும், தலைமைக் காவலர் வடிவேல் என்பவரும் ராமேஸ்வரத்திலிருந்து ஈரோட்டிற்கு வந்தோம். அன்று காலை 10.30 மணியளவில் ஈரோடு மாவட்ட வன அலுவலரை அவர் அலுவலகத்தில் சந்தித்து, மேற்படி OLX இணையதளத்தில் கடல் வாழ் உயிரினங்களை விற்பனை செய்வது பற்றி பேசினேன்.

2) ஈரோடு வனச்சரக அலுவலரை ஈரோடு மாவட்ட வன அலுவலகத்திற்கு வர வழைக்கப்பட்டார். மேற்படி இணையதள தகவலை இரவீந்திரநாத் அவர்களிடம் சொன்னேன். பிறகு ஈரோடு வன சரக அலுவலர் திரு. இரவீந்திரநாத் அவர்கள் தலைமையில் மேற்படி குற்றவாளிகளை பிடிக்க ஒரு தனிக் குழு ஏற்பாடு செய்தார். பிறகு மேற்படி OLX இணையதளத்தில் தடை செய்யப்பட்ட கடல் வாழ் உயிரினங்களை விற்பனை செய்வதற்காக கொடுக்கப்பட்ட செல்போன் எண்ணை தொடர்பு கொண்டு மேற்படி கடல் வாழ் உயிரினங்கள் கிடைக்குமா என்று கேட்டோம். மேற்படி செல்போனில் பேசிய நபர் ஈரோடு வஉசி பூங்கா அருகில் வருமாறு கூறினார். நாங்கள் மதியம் 1.00 to 1.15 மணியளவில் எங்களது குழுவினருடன் வஉசி பூங்கா அருகில் காத்திருந்தோம். எதிரிகள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். எதிரிகள் இருவரும் வந்துவிட்டு தலைமைக்காவலர் வடிவேலிற்கு தொடர்பு கொண்டு நாங்கள் பொருளைக் கொண்டு

வந்துவிட்டோம், நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் எனக் கேட்டார்கள். பின்பு அவர்களை எங்களது குழுவினர் அடையாளம் கண்டுபிடித்து சம்பவ இடத்திலேயே ஸ்பார்ட் மகஜர் தயார் செய்து மாவட்ட வன அலுவலரிடம் அவர்களை ஒப்படைத்து விட்டு சென்றுவிட்டோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

8.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.376/2021

PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : இரவீந்திரநாத் | Caste | : |
| Father's Name | : நடராஜன் | Calling | : |
| Husband's Name | : | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

1,2 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 17.10.2024

முதல் விசாரணை

1) நான் தற்சமயம் உதகை வனமண்டல் குன்னூர் வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஈரோடு வனச்சரக அலுவலராக 2016-2023 வரை பணிபுரிந்தேன்.

2) கடந்த 03.03.2020 அன்று நான் ஈரோடு வனச்சரக அலுவலராக பணியிலிருந்தபோது ஈரோடு மாவட்ட வன அலுவலர் அவர்கள் 03.03.2020 அன்று காலை 10.00 மணியளவில் அவரது அறைக்கு அழைத்தார். அந்த அறையில் வன அலுவலருடன், Wild Life Crime Control Bearue ல் பணியாற்றும் ஆய்வாளர் திரு. ரெங்கேஷ்வரன் என்பவரும் இருந்தார். மாவட்ட வன அலுவலகர் அவர்கள் என்னிடம் கடல் வாழ் உயிரினங்களை OLX என்ற இணையதளத்தில் செல்போன் மூலமாக விற்பனை செய்ய விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதன்பின்னர் நான், ஆய்வாளர் திரு. ரெங்கேஷ்வரன், வனக்காப்பாளர் திரு. விஜயகுமார், வன காப்பாளர் திரு. தேவராஜ், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனகாப்பாளர் திரு. சண்முக சுந்தரம் ஆகியோர் அடங்கிய குழுவினருடன் எனது தலைமையில் OLX இணைதளத்தை பார்வையிட்டபோது வீரராஜ்குமார் என்ற எதிரி இதில் ஈடுபட்டதை தெரிந்து கொண்டு சம்மந்தப்பட்ட எதிரிகளை அழைப்பதற்கு திட்டமிட்டோம்.

3) அதன்படி இணையதளத்தில் இருந்த 1 ம் எதிரி வீரராஜ்குமாரின் கைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு அவர் விற்பனைக்கு அறிவித்த பொருட்கள் எங்களுக்கு தேவைப்படுவதாக அழைத்தன் பாரில் ஈரோடு வஉசி பூங்கா அருகில் அன்று 03.03.2020 சுமார் 1.45 மணியளவில் அவரும், அவருடன் பெயர் தெரியாத எதிரி ஒருவரும் TN33 B 1129 Splender இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்தனர். அவர்கள் கையில் 3 அட்டைபெட்டிகள் இருந்தது. அவர்களை 1.50 மணிக்கு ஆய்வு செய்தபோது அவர்கள்

கொண்டு வந்த பெட்டிகளில் இறந்த பவளபாறைகள் 38 எண்ணிக்கையும், கடல் விசிறிகள் 5 எண்ணிக்கையும், சிலந்தி சங்கு 18 எண்ணிக்கையும், மாட்டுத்தடை சங்கு 1, கடற் பஞ்சுகள் 4, கோப்பை வடிவ பவளபாறை 3, பச்சை கிளி உயிருடன் 1, இருந்தது பார்வையிடப்பட்டது. அதன் அடிப்படையில் அவர்களை விசாரணை செய்து 1 ம் எதிரி வீரராஜ்குமார் என்பவரிடம் விஜயகுமார் வனகாப்பாளர் அவர்களால் 2.10 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. 2.15 மணியளவில் 2 ம் எதிரியான நகுலேஷ் என்பவரிடம் தேவராஜ் வனகாப்பாளர் அவர்களால் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

4) பிறகு வனக்காப்பாளர் விஜயகுமார் அவர்கள் H நமுனாவில் எண்.0008707 நாள் 03.03.2020 அன்று மேற்படி உயிரினங்கள் கைப்பற்றப்பட்டது. அத்துடன் 1 ம் எதிரியிடமிருந்து Vivo செல்போன், 2 ம் எதிரியிடமிருந்து Lenova செல்போன், இருசக்கர வாகனம் H நமுனாவில் கைப்பற்றப்பட்டது. சுமார் 2.30 மணியளவில் திரு. தேவராஜ் என்பவர் பார்வை மகஜர் தயார் செய்தார். மேலும் சுமார் 2.45 மணிக்கு தேவராஜ் என்பவர் ஸ்தல வரைபடம் தயார் செய்தார். இவர்கள் இருவரும் வைத்திருந்த பவளப்பாறை மற்றும் கடல் பாசிகள் வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 அட்டவணை 1 பகுதி 4 (A) ல் குறிப்பிடப்பட்டது. மற்ற சிலந்தி சங்குகள், மாட்டுதல சங்கு, கோப்பை வடிவ பவள பாறைகள் ஆகியவை வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 அட்டவணை 1 பகுதி 4 (B) ல் குறிப்பிடப்பட்ட உயிரினங்களாகும். மேலும் பச்சைக் கிளி வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 அட்டவணை 4 ல் குறிப்பிடப்பட்ட உயிரினமாகும். மேற்கண்ட உயிரினங்கள் வைத்திருப்பதோ, விற்பனை செய்வதோ வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 2(1), 2(15), 2(16), 9, 39(1a), (d), 34, 49, 50(1) ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே இவர்களை மாவட்ட வன அலுவலர் முன்பு ஆஜர்படுத்தி பின்பு 1,2 எதிரிகளை இரவு சுமார் 7.00 மணிக்கு என்னால் தொட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். மேற்படி கைப்பற்றப்பட்ட வன உயிரின பொருட்கள் நீதிமன்றத்தில் வைக்க போமுான இடவசதி இல்லாததால் எங்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. பச்சைக் கிளி நீதிமன்ற உத்தரவின் பேரில் வெள்ளோடுபறவைகள் சரணாலயத்தில் உயிரோடு விடப்பட்டு அறிக்கை நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. இரண்டு செல்போன்கள், மற்றும் இரு சக்கர வாகனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**